**வாசிக்க**: **தானியேல்** 5:1-30

**துணிகரமான பாவத்தைவிட கொடிய விஷம் ஏதுமில்லை**.

நேபுகாத்நேச்சருக்கு பின் அவனுடைய மகன் பெல்ஷாத்சார் ராஜாவானபோது திரட்சியான செல்வமும் அதிகாரமும் அவனை மதிமயக்கியது. ஒருநாள் தன் விருந்தில் பயன்படுத்த எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பரிசுத்த பாத்திரங்களை தரபண்ணி தானும் தன் மனைவி வைப்பாட்டிகளோடு குடித்து வெறித்தான். அச்சமயத்தில் தானே ஒரு கரம் வந்து அங்கேயுள்ள சுவற்றில் புரிந்துகொள்ள முடியாதவைகளை எழுதியது. யாருக்கும் அது புரியாததால் ராஜா கலங்கியபோது, தானியேலை வரவழைத்தார்கள். தானியேல் அதை படித்துவிட்டு உன் தகப்பனுக்கு நடந்தது எல்லாம் அறிந்திருந்தும் நீ துணிகரமாக தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களை அவமதித்ததால் தேவகோபம் உன்மேல் வரப்போகிறது. இனி ராஜ்யபாரம் உன்னிடம் இருக்காது நீ அழிக்கப்படுவாய் என்றதும், அவன் பயந்து தானியேலை உயர்த்தி, அதன் மூலம் தேவனிடத்தில் தயவுகிடைக்குமா என பார்த்தான். ஆனால் அன்றிரவே பெல்ஷாத்சார் கொல்லபட்டு ராஜ்ஜியம் மேதியனான தரியு ராஜாவிடம் சென்றது.

**கேள்வி**:

நேபுகாத்நேச்சருக்கு மூன்றுமுறை மனந்திரும்ப வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் பெல்ஷாத்சாருக்கு ஒருமுறை கூட தேவன் வாய்ப்பளிக்கவில்லையே?

**பதில்**:

யார் இந்த பெல்ஷாத்சார்? நேபுகாத்நேச்சரின் சேஷ்டபுத்திரன். இவன் வருங்கால ராஜாவானபடியால் எல்லா ராஜகாரியங்களையும் அறியும்படி தகப்பனோடே இருந்தவன். ஆதலால் நேபுகாத்நேச்சருக்கு என்னவெல்லாம் நடந்ததோ அனைத்தையும் பார்த்தவன். தேவன் நேபுகாத்நேச்சருக்கு காண்பித்த அற்பதங்களை சிறுவயதிலிருந்தே பார்த்து தேவனாகிய கர்த்தரே அதிகாரத்தை தருபவர் என்பதையும் ஆழமாக அறிந்த பெல்ஷாத்சாருக்கு இன்னும் எத்தனை வாய்ப்பு தரமுடியும். தேவனை அறியாதவர்களிடம் அவர் நீடியபொறுமையோடு செயல்படுகிறவர் அவரை அறிந்தும், துணிகரமாக அவருக்கு விரோதமாக செயல்படுபவர்க்கு எப்படி வாய்ப்பளிக்க முடியும்? அவர் நீதியுள்ள, சத்தியமுள்ள நீடியபொறுமையுள்ள தெய்வம். அவர் செய்கையில் பிழையென்பதேயில்லை. ஆதலால் அவருக்கு பிரியமில்லதது என தெரிந்திருந்தும், துணிகரமாக தவறு செய்ய ஒருபோதும் துணியாதே. நாம் தேவனாகிய கர்த்தர் எவ்வளவு அன்புள்ளவரோ அவ்வளவு நீதியும் உள்ளவர் என்பதை அறிந்து வாழவேண்டும்.

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார், விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார், அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய். ரோமர் 11 :22

**ஜெபம்**

அன்பும் இரக்கமும் நிறைந்த தகப்பனே. அறிந்தோ, அறியாமலோ நாங்கள் பாவம் செய்யக் கூடாது. பரிசுத்தமாய் வாழ கிருபை தாங்கப்பா. ஆமென்